C.C No. 21/2021
Pw–1 அசோகன் த/பெ.சாத்தையா
Date 12.07.2024

(A1 died. A2, A3, A4 are present)

<u>மனு அனுமதிக்கப்பட்டு மனுவின்பேரில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எங்கள் ஊர் திருவிழாவில் கூட்டமாக சண்டை போட்டார்கள் அந்த சண்டையில் தான் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். திருவிழாவிற்கு வெளியூர் நபர்கள் அதிகமாக வந்திருந்தார்கள் என்றால் சரிதான். யார் என்னை தாக்கினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது.

2. எனக்கு ஏற்பட்ட காயம் சம்பந்தமாக நான் ஆர்.எஸ்.மங்கலம் ஆரம்ப சுகாதார மையத்தில் சிகிச்சை எடுத்துக் கொண்டேன் என்றால் சரிதான். மேற்படி மருத்துவமனையில் போலிசார் என்னிடம் எழுதாத வெள்ளை பேப்பரில் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான்.

3. புகார்வாக்குமூலத்தில் என்ன விவரங்கள் எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி சம்பவத்தில் எனது மனைவிக்கு எந்தவித காயமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். எதிரிகள் குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் உள்ள முன்விரோதம் காரணமாக நாங்கள் சம்பவ சமயத்தில் பேசிக்கொள்ள மாட்டோம் என்றால் சரிதான்.

4. சம்பவம் சம்பந்தமாக எனது மனைவிக்கும் எனது மகனுக்கும் சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது எனறால் சரிதான். கேள்விபட்டு தான் அவர்களுக்கு சம்பவம் பற்றி தெரியும் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் நான் சொன்ன விவரங்கள் அனைத்து போலிசார் சொல்ல சொன்னதை தான் சொன்னேன் என்றால் சரிதான்.

5.	போலிசார் எதிரிகள் தான் என்னை தாக்கியதாக சொன்னார்கள் எதிரிகள் மீது உள்ள முன்விரோதம் காரணமாக எதிரிகள் தான் என்னை அசிங்கமாக பேசி, அடித்து, கொலை மிரட்டல் விடுத்ததாக போலிசார் என்னிடம் சொன்னதை நம்பி சந்தேகத்தின் அடிப்படையில் முதல் விசாரணை சாட்சியமளித்தேன் என்றால் சரிதான்.

6.	நான் விசாரித்ததில் எதிரிகள் என்னை அசிங்கமாக பேசி, அடித்து, கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றால் சரிதான். நான் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை ஏதும் பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான்.